# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2399/03 - 2024 අගෝස්තු මස 26 වැනි සඳුදා - 2024.08.26

*2399/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) உட்பந்தியின் கீழான ஊடக வழிகாட்டிநெறிகள்**

இறுதியாக அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) உட்பந்தியின் கீழ் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்காக, தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படுகின்ற ஊடக வழிகாட்டிநெறிகளை கீழ்க்காணும் அட்டவணை இல. 01, 02, 03 ஆகியவற்றில் காணலாம்.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சி. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, ஓகத்து 26.


1A - G 42603 — 05 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை இல. 01**

**01. ஊடக வழிகாட்டிநெறிகளை வலுவாக்கம் செய்வதற்கும் விதப்புரைகளைச் செய்வதற்குமான (நிரந்தர) பிரதிநிதிகள் குழுவும் பொதுவான விடயங்களும்**

*1.1* ஒவ்வோர் ஊடக நிறுவனமும் தமது செய்தி அறிக்கைகளையும் பத்திரிகைத் தலைப்புச் செய்திகளையும் வழங்கும்போதும், அரசியல் அலுவல்களுடன் சம்பந்தப்பட்ட வேறு நிகழ்ச்சிகளை பிரச்சாரம் அல்லது ஒலிபரப்பு/ஒளிபரப்புச் செய்யும்போதும் அல்லது பகிரங்கப்படுத்தும் போதும் சரியான, சமநிலையான, பக்கச்சார்பற்ற தகவல்களை வழங்குதல் வேண்டும். இது சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட கீழ்க்காணும் ஊடக வழிகாட்டிநெறிகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதும், இலத்திரனியல் ஊடகங்களின் பக்கச்சார்பின்மை குறித்து கிரமமாக மேற்பார்வை செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் ஊடக வழிகாட்டிநெறிகளுக்கமைய செயலாற்றுதல் குறித்த அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் செய்வதற்கான (நிரந்தர) பிரதிநிதிகள் குழுவொன்று நியமிக்கப்படுகிறது. இக்குழு, தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கும் ஆலோசனைகளுக்கும் அமைய செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், இக்குழுவின் அவதானிப்புகளும் விதப்புரைகளும் குறித்து பரிசிலித்து தேர்தல் ஆணைக்குழு தேவையான முடிவுகளை எடுக்கும். இக்குழுவின் இணைப்பாக்கமும் உறுப்பினர்களும் ஆணைக்குழுவினால் சனாதிபதியின் தேர்தலுக்கான திகதி பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர் அறிவிப்புச் செய்யப்படும்.

*1.2* இந்த ஊடக வழிகாட்டிநெறிகளில் "தேர்தலொன்று நடைபெறும் காலப்பகுதி" என்பது விடயத்திற்கேற்ப, மக்கள் தீர்ப்பொன்றை அல்லது வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கான ஒரு பிரகடனம் அல்லது ஒரு பணிப்பு விடுக்கப்பட்ட திகதியில் ஆரம்பித்து, விடயத்திற்கேற்ப, குறித்த மக்கள் தீர்ப்பின் அல்லது வாக்கெடுப்பின் தேர்தல் முடிவு வெளியிடப்படும் திகதியில் முடிவடையும் காலப்பகுதி என்று பொருளாகும்.

**அட்டவணை இல. 02**

**02. இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள், இணைய வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடக வலைத்தளங்களின் நிருவாகிகளுக்கான வழிகாட்டிநெறிகள்**

*2.1* ஒவ்வொரு தொலைக்காட்சி நிறுவனமும் ஒலிபரப்பு நிறுவனமும் யாதேனுமொரு தேர்தல் தொடர்பாக அறிக்கையிடும்போது நடுவுநிலைமையுடனும் பக்கச்சார்பின்றியும் இருத்தல் வேண்டுமென்பதுடன், போட்டியிடும் யாதேனுமோர் அரசியல் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு பங்கம் ஏற்படாதவாறும், வாய்ப்பான ஒரு நிலை ஏற்படாதவாறும், அரசியல் கட்சியொன்றுக்கு, சுயேச்சைக் குழுவொன்றுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு வானொலி அல்லது தொலைக்காட்சி ஊடாக வானலை காலத்தை வழங்குதல் வேண்டும்.

*2.2* செய்தித்தாள்களின் ஆசிரியர் தலைப்புக்களும் ஏனைய அறிக்கைகளும் குறித்து இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக கருத்துரைக்கும் போது, எந்தவோர் அரசியல் கட்சி/சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரையும் ஊக்கப்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது பாதிப்பு ஏற்படக்கூடிய விதத்தில் கருத்துரைக்கப்படுதலாகாது. ஆசிரியர் கருத்தொன்று பரப்பீடுசெய்யப்படும் அல்லது ஒலிபரப்பு செய்யப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் அதன் மூலம் பாதிப்புக்குள்ளாகும் தரப்புக்கும் அந்த அபிப்பிராயத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் விடயங்களைப் பரப்பீடுசெய்வதற்கு அல்லது ஒளி/ஒலிபரப்புச் செய்வதற்கும் ஒத்த சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

*2.3* தொலைக்காட்சி அத்துடன் வானொலி அலைவரிசையொன்றில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கின்றவர் அல்லது அறிவிப்பாளர் ஒவ்வொருவரும், செய்தித்தாள்களின் தலைப்புச்செய்திகளையும் கேலிச்சித்திரங்களையும் தொகுத்தளிக்குமிடத்து, ஒரு திறத்தவரை ஊக்கப்படுத்துகின்ற அல்லது மற்றுமொரு திறத்தவருக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதத்தில் தமது சொந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

*2.4* யாதேனுமொரு நிகழ்ச்சி, கலந்துரையாடல் அல்லது செய்தியறிக்கை தேர்தல் சட்டங்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக வழிகாட்டிநெறிகளுக்கும் ஒத்திசைவற்றதாக இருப்பின், தேர்தல் காலப்பகுதியினுள் அவ்வாறான பக்கச்சார்பான ஒரு நிகழ்ச்சியை அல்லது கலந்துரையாடலை பிரச்சாரம் அல்லது ஒளி/ஒலிபரப்பு செய்யாதிருப்பது அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் செய்தி மற்றும் நடப்பு விவகாரப் பிரிவுகளின் பொறுப்பாதல் வேண்டும்.

*2.5* தேர்தல்/வாக்கெடுப்பு நடைபெறும் காலப்பகுதியினுள் யாதேனுமொரு சம்பவத்தை அல்லது நிகழ்வை உள்ளடக்கி, அது பற்றிய விடயங்களை ஒரு கட்சியின்/ சுயேச்சைக் குழுப் பிரதிநிதியொருவரினால் அல்லது வேட்பாளரொருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்துரைப்புடன் பிரச்சாரம் செய்யும்போது அல்லது ஒளி/ ஒலிபரப்பு செய்யும்போது, அச்சம்பவம் பற்றிய ஆர்வமும் கரிசனையுமுள்ள அல்லது அவ்விடயங்களினால் பாதிப்புக்கு உள்ளாகும் சாத்தியமுள்ள வேறேதேனுமொரு கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கும் குறித்த சம்பவம் அல்லது நிகழ்வு தொடர்பில் கருத்துரைப்பதற்கு ஒத்த சந்தப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

*2.6* யாதேனும் தேர்தல் நடைபெறும் காலப்பகுதியொன்றினுள் பிரச்சாரம் செய்யப்படும் அல்லது ஒளி/ஒலிபரப்பு செய்யப்படும் தேர்தலுடன்/வாக்கெடுப்புடன் நேரடியாக சம்பந்தப்பட்ட யாதேனுமொரு விவரண நிகழ்ச்சியை அல்லது சிறப்பு நிகழ்ச்சியை பிரச்சாரம் அல்லது ஒளி/ஒலிபரப்பு செய்யும்போதும் பிரதியாக்குநரதும், அறிவிப்பாளரதும், ஆசிரியரதும் பெயர் அந்நிகழ்ச்சி நடைபெறும்போது வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் ஊடக நிறுவனம் அத்தகைய விபரங்களை வெளியிடாதிருப்பதற்கான உரிமையைத் தொடர்ந்து வைத்திருக்கும் பட்சத்தில், அச்சந்தரப்பத்தில் அத்தகைய நிகழ்ச்சிக்குப் பொறுப்பான ஆள் அதன் உள்ளீடு பற்றிய பொறுப்பை ஏற்றல் வேண்டும்.

*2.7* யாதேனுமொரு தேர்தலின்போது போட்டியிடும் கட்சியொன்றுக்கு/சுயோச்சைக் குழுவொன்றுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு எதிராக உறுதிப்படுத்த முடியாத மற்றும் பிழையற்ற தன்மையை எண்பிக்க முடியாத சார்த்துதல்களை, ஏதேனுமொரு நிகழ்ச்சி அல்லது செய்தியறிக்கையின்போது ஒவ்வோர் ஊடக நிறுவனமும் பிரச்சாரம் அல்லது ஒளி/ஒலிபரப்பு செய்வதைத் தவிர்க்க வேண்டும். தான் தொடர்பில் வேறு வேட்பாளரொவரினால் அல்லது ஆதரவாளரொருவரினால் செய்யப்படட ஒரு வெளிப்படுத்தல் பொய்யானதென அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதென ஏதேனுமோர் அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் தெரிவிப்பாராயின், அத்தகைய கூற்றுக்கெதிராக விளக்கமளிப்பதற்கு அக்கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு நிகழ்ச்சிகளில் கட்டணம் அறவிடப்படாமல் சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

*2.8* யாதேனுமோர் அரசியற் கட்சியை, சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்தும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியங்கொண்ட ஏதேனும் அலுவலக முறையான வைபவத்தை அல்லது நிகழ்வை வெளிப்படுத்துகின்ற குற்றச்செயலொன்றோடு தொடர்புடைய ஏதேனும் செய்தி அல்லது நிகழ்ச்சி வெளியிடப்படுமிடத்து, அத்தகைய செய்தி அல்லது நிகழ்ச்சி எதேனும் தேர்தலுடன்/வாக்கெடுப்புடன் தொடர்புபடாததாக இருப்பினுங்கூட எந்தவோர் ஊடக நிறுவனமும் அத்தகைய செய்தியை அல்லது நிகழ்ச்சியை வெளியிடுமாயின், அதன் சரியாந்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளிடமிருந்தும் விளக்கம் கோர வேண்டும்.

*2.9* தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் சனாதிபதியினால் அல்லது பிரதம அமைச்சரினால் அல்லது எவரேனும் அமைச்சரொருவரினால் அபிப்பிராயங்கள் அல்லது கருத்துக்கள் வெளிப்படுத்தப்படும் ஒரு சந்தர்ப்பம் வானொலி ஊடாக அல்லது தொலைக்காட்சி ஊடாக வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள் எந்த அரசியற் கட்சியைச் சார்ந்தவராகவுள்ளாரோ அந்த அரசியற் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்துதலாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆதலால், அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற ஏதேனும் எதிரணி அரசியற் கட்சியொன்றினால் அதற்காக பெயர்குறிப்பீடு செய்யப்படும் தலைவரொருவருக்கும் நிகழ்ச்சிகளில் கட்டணம் அறவிடப்படாமல் ஒத்த சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

*2.10* யாதேனுமொரு கட்சியை/சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவருக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதத்தில் வேட்பாளரெவருக்கும் விசேட மற்றும் சார்பான கவனிப்பை வழங்கி, வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் வானலை காலத்தை குறித்தொதுக்குதலாகாது.

*2.11* ஒரு தேர்தல்/வாக்கெடுப்பில் போட்டியிடுகின்ற ஒரு கட்சி/சுயேச்சைக் குழு/வேட்பாளரெவரையும் ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரெவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதத்தில் பகிரங்க அலுவலர்களுக்காக நடாத்தப்படும் விரிவுரைகள், நேர்காணல்கள் அல்லது அத்தகைய வேறு நிகழ்ச்சிகளை தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் பகிரங்கப்படுத்துதல் அல்லது வெளியிடுதலாகாது.

*2.12* அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்களல்லாத பகிரங்க அலுவலர்களினதும் முனைப்பான பணியிலீடுபட்டிருக்கின்ற பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் அலுவலர்களினதும் இளைப்பாறிய பாதுகாப்புப் படை அதிகாரிகளினதும் அல்லது பொலிஸ் அலுவலர்களினதும் சீருடை தரித்தவர்களாக பெற்றுக்கொள்ளும் நிழற்படங்களை அல்லது கூற்றுக்களை, கட்சிகளை அல்லது வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது பங்கம் ஏற்படுத்துகின்ற விதத்தில் வெளியிடுதல், ஒளி/ஒலிபரப்புதல் அல்லது பகிரங்கப்படுத்துதலாகாது.

*2.13* குழுநிலைக் கலந்துரையாடல்களுக்காக பங்குபற்றுநர்களைத் தெரிவுசெய்யும்போது அனைத்து இலத்திரனியல் ஊடாக நிறுவனங்களும் பங்குபற்றுநர்களின் இணைப்பாக்கம் சமநிலையானதாக இருக்கின்றதாக நியாயமான விதத்தில் செயலாற்றுதல் வேண்டும். ஒவ்வோர் ஊடக நிறுவனமும், எவரேனும் பங்குபற்றுநர் எக் குறிப்பிட்ட

மொழியில் தேர்ச்சியற்றவராக உள்ளாரோ அக்குறிப்பிட்ட மொழியில் நிகழ்ச்சியை நடாத்துவதன் மூலம் அத்தகைய பங்குபற்றுநருக்கு பங்கம் ஏற்படுகின்ற விதத்தில் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதனைத் தவிர்த்தல் வேண்டும். தெளிவற்ற அல்லது புரிந்துகொள்வதற்கு சிரமமான வினாக்களைத் தொடுப்பதன் மூலம் பெறப்படும் தகவல்களை வெளியிடுதலாகாதென்பதுடன், ஒருபோதும் அத்தகைய வினாக்கள் தொடுக்கப்படுதலாகாது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் ஒழுக்கமுறையற்றனவாகவுள்ள அல்லது மத நல்லிணக்கத்திற்கு அல்லது இன ஐக்கியத்துக்கு ஊறுவிளைவிக்கின்றனவாகவுள்ள கூற்றுக்களை நிகழ்ச்சியிலான பங்குபற்றுநர் அளிக்கக் கூடாதென அவர் எச்சரிக்கைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், கலந்துரையாடல் நடைபெறுவதற்கிடையில் அத்தகைய கூற்றுக்கள் அளிக்கப்படின், ஊடனடியாக அந்நிகழ்ச்சி நிறுத்தப்படுதல் வேண்டும்.

2.14 தொலைபேசி வாயிலாக வினாக்களையும் தகவல்களையும் பெற்றுக்கொண்டு நடாத்தப்படும் ஏதேனுமொரு நிகழ்ச்சியில், ஒழுக்கத்துக்கு முரணானதாகவிராத, மத நல்லிணக்கத்திற்கு அல்லது இன ஐக்கியத்திற்கு ஊறுவிளைவிக்காத மற்றும் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக அவர்களினால் முன்வைக்கப்படும் வினாக்களுக்கும் பிரேரணைகளுக்கும் ஒத்த வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நிகழ்ச்சியொன்றை நெறிப்படுத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் சமச்சீரற்ற நிகழ்ச்சிக்காக வகைசொல்ல வேண்டியவராதல் வேண்டும்.

2.15 யாதேனும் இலத்திரனியல் ஊடக நிறுவனத்தின் எவரேனும் தவிசாளர், முகாமைச் சபை உறுப்பினர், பணிப்பாளர் அல்லது எவரேனும் ஊடகவியலாளர் அரசியல் செயற்பாடுகளில் செயலூக்கமுடன் ஈடுபடுவாராயின், அத்துடன் அத்தகைய ஏதேனும் செயற்பாடு, சமச்சீரான ஒலிபரப்பை அல்லது வெளியீட்டை வழங்குவதில் அக்கறை முரணைத் தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கின்றவிடத்து, அத்தகைய ஆள், நிறுவனத்தின் முகாமைக்கு பின்வருவனவற்றை எழுத்தில் அறிவித்தல் வேண்டும்:

(அ) அத்தகைய ஆள், அரசியற் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளமை;

(ஆ) நிறுவனத்தில் வகிக்கின்ற பதவிகள்; அத்துடன்

(இ) அத்தகைய ஆள், நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் அல்லது நெறிப்படுத்துவதில் சம்பந்தப்பட்டுள்ள அளவு.

2.16 யாதேனுமோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியில் எவரேனுமாள் ஏதேனும் முக்கிய பதவியை வகிக்கின்றவிடத்தும், அத்துடன் ஊடக நிறுவனமொன்றின் தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர், பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதம பதிப்பாசிரியர் போன்ற முக்கிய பதவியை எவரேனுமாள் வகிக்கின்றவிடத்தும், அத்தகைய ஆள் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக இருக்கின்றவிடத்தும் அல்லது அத்தகைய ஆள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக உள்ளாரோ அந்தக் கட்சியின் கீழ் நேரடியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டணியான அல்லது அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்றவிடத்தும், அவர் அத்தகைய ஊடக நிறுவனத்தில் அவருக்கு குறித்தளிக்கப்பட்ட கடமைகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருத்தல் வேண்டும். மேலும், அத்தகைய ஆள் தேர்தலில்/வாக்கெடுப்பில் போட்டியிடுகின்ற வேட்பாளராக அல்லது அதில் முக்கிய பதவி வகிப்பவராகவிருப்பின், ஏதேனும் தொலைக்காட்சி அல்லது ஒலிபரப்பு அலைவரிசையொன்றில் அரசியல் தன்மையினதான ஏதேனும் நிகழ்ச்சியை நடாத்துவதிலிருந்து அவர் விலகியிருத்தல் வேண்டும்.

2.17 அரசியற் கட்சியொன்றின்/சுயேச்சைக் குழுவொன்றின் எவரேனும் பங்குபற்றுநர், அத்தகைய பங்குபற்றாமைக்கான ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் ஏதேனும் ஊடக நிறுவனத்தில் ஒரு கலந்துரையாடலில் அல்லது நேர்காணலில் பங்குபற்றுவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய ஊடக நிறுவனம், அத்தகைய பங்குபற்றாமையை அழுத்திக்கூறுவதற்கு ஒரு வெற்றுக் கதிரையை வெளிக்காட்டி வைத்தலோ அல்லது வேறு ஒத்த நாடகப் பாணியிலான நிலைமையை உருவாக்குதலோ ஆகாது. பங்குபற்றுநரின் வராமை பற்றி எளிமையானதும் நேரடியானதுமான அறிவித்தலொன்றைச் செய்தல் உகந்ததாகும்.

2.18 தேர்தலொன்று/வாக்கெடுப்பொன்று பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் பெறுபேற்றை ஒலிபரப்புகின்ற ஏதேனும் இலத்திரனியல் ஊடகம், அத்தகைய அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்திய ஒழுங்கமைப்பின் பெயரையும் அத்தகைய வாக்கெடுப்புக்கு நிதியளித்த ஒழுங்கமைப்பையும் அல்லது ஆளையும், ஆய்வின்/அபிப்பிராய வாக்கெடுப்பின் தேவைப்பாட்டையும், அதற்காக ஈடுபடுத்தப்பட்ட முறைமையியலையும், மாதிரியின் அளவையும், பிழைகளின் விளிம்பையும், வெளிக்கள வேலைக் காலப்பகுதியையும் அறிவித்தல் அல்லது வெளியிடுதல் வேண்டும். மேலும், ஒலிபரப்புநர் அல்லது வெளியீட்டாளர், அத்தகைய அபிப்பிராய வாக்கெடுப்பு, அத்தகைய வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில் மட்டுமே பொது மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றதென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

2.19 வேட்பாளரொருவர், தன்னைச் சாராத வேறேதேனும் கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் அல்லது வேட்பாளரொருவரின் வேட்புரிமையை ஊக்கப்படுத்துவதற்கு யாதேனும் கூற்றுக்களைத் தெரிவிக்கின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய கூற்றுக்களை ஒலிபரப்புச் செய்வதன் மூலம் அவற்றுக்கு பிரசித்தமொன்றை வழங்குதலாகாது.

2.20 ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையத்தின் உட்புறத்தில் நிழற்படங்களை எடுப்பதை அல்லது வீடியோ செய்வதை தேர்தல் ஆணைக்குழுவின் உரிய எழுத்திலான சம்மதமின்றியவிடத்து தவிர்த்தல் வேண்டும். அனுமதியின்றிப் பெறப்பட்ட எவையேனும் நிழற்படங்கள் அல்லது வீடியோ காட்சிப் படங்களை இலத்திரனியல் அல்லது சமூக ஊடகங்கள் வாயிலாக பகிரங்கப்படுத்தல் ஆகாது. தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பெறப்பட்ட நிழற்படங்களும் வீடியோ காட்சிப் படங்களும்கூட வாக்கெடுப்புக்குப் பின்னரே வெளியிடப்படலாம் அல்லது ஒளிபரப்பு செய்யப்படலாம்.

2.21 எவரேனும் வேட்பாளரினால் நடாத்தப்பட்ட அல்லது அவரை உட்படுத்துகின்றதாக ஏதேனும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளரொருவரை மேம்படுத்துகின்றதாக அல்லது அதன் நிலையைக் குறைக்கின்றதாக தேர்தல்/வாக்கெடுப்பு திகதிக்கு முன்னர் ஒளிபரப்பப்பட்ட அல்லது ஒலிபரப்பப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் வர்த்தக விளம்பரம், நொடி வினா-விடை நிகழ்ச்சி, பொழுதுபோக்கு நிகழ்ச்சி, அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்புடைய ஏதேனும் நிகழ்ச்சி அல்லது அத்தகைய எவையேனும் செயற்பாடுகள் அல்லது அத்தகைய செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஏதேனும் நிகழ்ச்சி, திரைப்படம், தொலைக்காட்சி நாடகம், இசை நிகழ்ச்சி அல்லது அத்தகைய தன்மையினதான வேறேதேனும் நிகழ்ச்சி, தேர்தல்/வாக்கெடுப்புத் திகதிக்கு நேர் முன்னர் நிலவுகின்ற அமைதி காலப்பகுதியினுள் ஒளிபரப்பப்படுதலாகாது அல்லது ஒலிபரப்பப்படுதலாகாது அல்லது வெளியிடப்படுதலாகாது.

2.22 தேர்தல்/வாக்கெடுப்புப் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் "அமைதி காலம்" எனப்படுவது தேர்தலை/வாக்கெடுப்பை நடாத்துவதற்கு குறித்தளிக்கப்பட்ட தினத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு ஆரம்பித்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுதல் வரையான காலமாகும். ஓர் அரசியற் கட்சியை/சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரொருவர் ஊக்கப்படுத்தப்படுவதற்கு அல்லது பாதிப்புக்குள்ளாவதற்கு காரணமாக அமைகின்ற விதத்தில் பிரச்சார நடவடிக்கை அல்லது பிரச்சார விளம்பரம் எதுவும் இக்காலப்பகுதியினுள் வெளியிடப்படுதலாகாது. இருப்பினும், அமைதி காலம் ஆரம்பிப்பதற்கு முந்திய தினத்தில் அரசியல் கட்சிகளை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்காக நடாத்தப்படுகின்ற பொதுக் கூட்டங்கள் குறித்த அறிக்கைகள், குறித்த கூட்டங்கள் நடைபெற்ற தினத்திற்கு மறுதினம் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் செய்தியறிக்கை இடம்பெறும் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் போட்டியிடுகின்ற கட்சிகளுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு ஒத்த காலப்பகுதி கிடைக்கின்றவாறு பிரச்சாரம் செய்யப்படலாம்.

2.23 மத நம்பிக்கைகள், மத வழிபாடுகள், பேச்சு வழக்குகள், இனத்துவம், வழக்காறுகள் மற்றும் சாதிகள் என்பன உட்பட, பல்வேறு ஏதுக்களின் மீது இலங்கை மக்களிடையே குரோதத்தையும் சகிப்புத்தன்மையின்மையையும் உருவாக்கக்கூடிய அல்லது தூண்டக்கூடிய பிரச்சாரத்தை ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனை இலத்திரனியல் ஊடக நிறுவனம் ஒவ்வொன்றும் தவிர்த்தல் வேண்டும்.

2.24 அரசியல் செயற்பாட்டாளர்களிடையேயும் சமூகத்தினுள்ளும் குரோதம் விளைவிக்கின்ற அரசியலை மேம்படுத்துகின்ற பிரச்சாரச் செயற்பாடுகளை ஒவ்வோர் இலத்திரனியல் ஊடக நிறுவனமும் ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

2.25 ஒவ்வோர் ஊடக நிறுவனமும், வெளிப்படுத்துநரின் சம்மதமின்றி வேறோர் அரசியற் கட்சி/சுயேச்சைக் குழு அல்லது வேறொரு வேட்பாளர் பற்றி எவரேனும் வேட்பாளரினால் அல்லது ஆதரவாளரினால் முன்னர் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை மீள வெளியிடுவதனை அல்லது மீள ஒளிபரப்புவதனைத் தவிர்த்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளினால் முன்னர் அளிக்கப்பட்ட அத்தகைய கூற்றை மீண்டும் வெளியிடாதிருக்கும்படி அல்லது ஒளிபரப்பாதிருக்கும்படி வெளிப்படுத்துநரினால் செய்யப்படும் கோரிக்கை குறித்து பரிசீலித்தலும் வேண்டும்.

2.26 அநாமதேய அறிவித்தல்களை அல்லது பிரச்சாரத்தை மற்றும் போலி ஒழுங்கமைப்புகளின் அல்லது ஆட்களின் அல்லது ஒழுங்கமைப்புகளின் அறிவித்தல்களை அல்லது பிரச்சாரத்தை ஏதேனும் ஊடக நிறுவனம் வெளிப்படுத்துதலாகாது. இது தொடர்பான பொறுப்பு, அந்தந்த ஊடக நிறுவனத்தைச் சார்ந்ததாதல் வேண்டும்.

2.27 ஏதேனும் ஊடக நிறுவனமும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கூற்றை அளிக்கின்ற அல்லது செய்திகளை வாசிக்கின்ற ஆளும் பிழையான கூற்றுக்களை அல்லது செய்திகளை வெளியிடுதல், ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் தொடர்பாக சமமான முறையில் வகைசொல்ல வேண்டியதாகவும் வகைசொல்ல வேண்டியவராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், இது தொடர்பாக எழக்கூடிய சட்ட வழக்கு நடவடிக்கைக்கு அமைந்ததாகவும், அமைந்தவராதலும் வேண்டும்.

2.28 தேர்தல் முடிவு எதுவும் தேர்தல் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வரை தேர்தலின்/வாக்கெடுப்பின் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளை பகிரங்கப்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

2.29 எல்லா அரச மற்றும் பகுதியளவிலான அரச ஊடக நிறுவனங்களும், ஏதேனும் அரசியற் கட்சியை, குழுவை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கு அரச ஆதனத்தையும் நிதிகளையும் ஈடுபடுத்துவதனை அல்லது அரசிறைக்கு நட்டம் விளைவிப்பதனை அத்துடன் ஏதேனும் நிறுவனத்துக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் செயலாற்றுவதனைத் தவிர்த்தல் வேண்டும். தனியார் ஊடகங்களும் அவ்வாறே செயலாற்றுதல் வேண்டும். ஊடக வழிகாட்டிநெறிகள் மீறப்படுதல் தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுடன் சேர்த்து மேலதிகமாக பொறுப்பாகவுள்ளோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம்.

2.30 எல்லா இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களும் இவ்வூடக வழிகாட்டிநெறிகளைக் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டுமென்பதுடன், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் அத்தகைய வழிகாட்டிநெறிகளுக்கமைவாக தமது பணியாட்குழுவினர் செயற்படுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

2.31 யாதேனும் தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள், சமூக ஊடக வலைத்தளங்களின் உரிமையாளர்களும் அவற்றின் நிருவாகிகளும் கேபிள் தொலைக்காட்சி அலைவரிசைகளின் உரிமையாளர்களும் இவ்வூடக வழிகாட்டிநெறிகளைப் பின்பற்றியொழுகுதல் அவர்களின் பொறுப்பாதல் வேண்டும்.

2.32 இணைய வலைத்தளங்களதும் சமூக ஊடக வலைத்தளங்களதும் நிருவாகிகள், செயற்கை நுண்ணறிவின் (AI) துணையுடன் ஆக்கப்பட்ட கணினிச் செய்நிரல்களின்மூலம் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் அல்லது வேட்பாளர்கள் அல்லது தேர்தல் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், பிழையான தகவல்களையும், திட்டமிட்டு திரித்துக் கூறப்பட்ட அல்லது உருச்சிதைத்த தகவல்களையும் பிரச்சாரம் செய்யாதிருப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

2.33 இணைய வலைத்தளங்களதும் சமூக ஊடக வலைத்தளங்களதும் நிருவாகிகள், தேர்தலுக்கு முந்திய கருத்துக்கணிப்புகளின் மூலம் அரசியற் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள்/வேட்பாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய விதத்திலான தவறான மக்கள் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும்.

2.34 இணைய வலைத்தளங்களதும் சமூக ஊடக வலைத்தளங்களதும் நிருவாகிகள் வேட்பாளர்களதும் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களதும் உருவழிக்கப்பட்ட நிழற்படங்கள், போலியான செய்தியறிக்கைகள், பிரத்தியேக தகவல்களை அனுமதியின்றி பிரச்சாரம் செய்தல் அல்லது இடைஞ்சலானதாக அமையக்கூடிய விதத்தில் பலவந்தமாக பரப்பீடு செய்தல் அல்லது அவ்வாறு செய்வதை தவிர்த்தல் வேண்டும்.

2.35 இணைய வலைத்தளங்களதும் சமூக ஊடக வலைத்தளங்களதும் நிருவாகிகள், வேறு ஆட்களின் பெயரில் தோன்றி போலியான சமூக ஊடக கணக்குகளை உருவாக்கி அரசியல் கட்சிகளுக்கு/சுயேச்சைக் குழுக்களுக்கு அல்லது வேட்பாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றவாறு செயலாற்றாதிருப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

2.36 இணைய வலைத்தளங்களதும் சமூக ஊடக வலைத்தளங்களதும் நிருவாகிகள், அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் அல்லது தேர்தல் தொடர்பான உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், பிழையான தகவல்களையும் திட்டமிட்டு திரித்துக் கூறப்பட்ட அல்லது உருச்சிதைத்த தகவல்களையும் பரப்பீடு செய்வதற்கு சமூக ஊடக இயக்குநர்களை ஈடுபடுத்திக் கொள்ளாதிருப்பதற்கும், உண்மைக்குப் புறம்பான சமூக ஊடக கணக்குகளினூடாக தவறான மக்கள் அபிப்பிராயமொன்றை எடுத்துக் காட்டுவதற்கு அல்லது உருவாக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும்.

2.37 ஒரு கட்சி/சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை, பிழையான தகவலை திட்டமிட்டு திரித்துக் கூறப்பட்ட அல்லது உருச்சிதைத்த ஒரு செய்தியை பிரச்சாரம் செய்வதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்குமிடத்து, அவை சம்பந்தமான விசாரணைகளின் பதில்களை வழங்குவதற்கும், சம்பந்தப்பட்ட செய்தியறிக்கை அல்லது தகவலை தமது இணைய வலைத்தளத்திலிருந்து, சமூக ஊடக கணக்கிலிருந்து நீக்கிவிடுவதற்கும் இணைய வலைத்தளங்களதும் சமூக ஊடக வலைத்தளங்களதும் நிருவாகிகள் செயலாற்றுதல் வேண்டும்.

2.38 யாதேனும் தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் ஊடக வழிகாட்டிநெறிகளுக்கமைய செயலாற்றுவது இலங்கையில் செயற்கைக்கோள் (Satellite) தொழில்நுட்பத்தினூடாக ஒளி/ஒலிபரப்புச் செய்யும் அனைத்து தொலைக்காட்சி மற்றும் வானொலி நிறுவனங்களின் உரிமையாளர்களினதும் அவற்றின் நிருவாகிகளினதும் பொறுப்பாதல் வேண்டும்.

2.39 தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் அரசியல்வாதிகளினால் அல்லது வேறு ஆட்களினால் வன்செயல்கள், தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் சட்டவிரோத செயல்களை மதித்து அல்லது சமூக குழுக்களுக்கிடையில் கொந்தளிப்புகளும்

வன்செயல்களும் ஏற்படும் விதத்தில் தெரிவிக்கப்படும் கூற்றுக்கள், உரைகள் அல்லது ஒலிநாடாக்களை ஔி/ஒலிபரப்புவதைத் தவிர்த்துக்கொள்வதற்கு அனைத்து ஊடக நிறுவனங்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

2.40 இந்த ஊடக வழிகாட்டிநெறிகளுக்குள் அடங்கப்பெறும் அல்லது அடங்கப்பெறாத விடயங்கள் தொடர்பான வானொலி, தொலைக்காட்சி அல்லது இணையம்/சமூக ஊடக வலைத்தளங்கள் ஆகிய ஊடகம் எதனூடாகவும் மேற்கொள்ளப்படுகின்ற வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்கள் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அல்லது நாட்டில் செயல்வலுவிலுள்ள தேர்தல்/வாக்கெடுப்புச் சட்டம் அல்லது வேறேதேனும் சட்டம் மீறப்படுமாயின் அவ்வாறான வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதை அல்லது ஒலி/ஔிபரப்பு செய்யப்படுவதை தவிர்த்தல் வேண்டும்.

2.41 இவ்வூடக வழிகாட்டிநெறிகளுக்கு அமைந்தொழுகுதல் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களினதும் சமூக ஊடக வலையமைப்புகளின் நிருவாகிகளினதும் அதனைப் பயன்படுத்துபவர்களினதும் கடமை மட்டுமன்றி, அவர்களின் பொறுப்பாதலும் வேண்டும். ஒலிபரப்பு அதிர்வெண்கள் பொதுமக்களுக்குச் சொந்தமானதென்பதால், அனைத்து கட்சிகளுக்கும்/ சுயேச்சைக் குழுக்களுக்கும் அல்லது வேட்பாளர்களுக்கும் ஒத்த சந்தர்ப்பம் உருவாகக்கூடிய விதத்தில் சுதந்திரமானதும் நியாயமானதுமான ஒரு தேர்தலை/வாக்கெடுப்பை நடாத்துவதற்கு இவ்வூடக வழிகாட்டிநெறிகளுக்கு அமைந்தொழுகுதல் இன்றியமையாததாக இருப்பதே அதற்குரிய காரணமாகும்.

**அட்டவணை இல. 03**

**03. அச்சு ஊடக நிறுவனங்களுக்கான ஊடக வழிகாட்டிநெறிகள்**

3.1 ஒவ்வோர் அச்சு ஊடக நிறுவனமும் யாதேனுமொரு தேர்தல்/வாக்கெடுப்பு தொடர்பாக அறிக்கையிடும்போது நடுவுநிலைமையுடனும் பக்கச்சார்பின்றியும் இருக்க வேண்டுமென்பதுடன், போட்டியிடும் யாதேனுமோர் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு பாதிப்பு ஏற்படாதவாறும் சார்பான ஒருநிலை ஏற்படாதவாறும் அரசியற் கட்சியொன்றுக்கு, சுயேச்சைக் குழுவொன்றுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு செய்தித்தாளொன்றில் இடமொதுக்கிக் கொடுத்தல் வேண்டும்.

3.2 யாதேனுமொரு செய்தித்தாள், கலந்துரையாடல், அநுபந்தம் அல்லது செய்தியறிக்கை, தேர்தல்/வாக்கெடுப்புச் சட்டங்களுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக வழிகாட்டிநெறிகளுக்கும் ஒத்திசைவற்றதாக இருப்பின், தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் அவ்வாறான பக்கச்சார்பான அறிக்கையை அல்லது அநுபந்தத்தை பிரசுரிக்காமல் இருப்பது அனைத்து அச்சு ஊடக நிறுவனங்களின் பொறுப்பாதல் வேண்டும்.

3.3 தேர்தல்/வாக்கெடுப்பு நடைபெறும் காலப்பகுதியினுள் யாதேனுமொரு சம்பவத்தை அல்லது நிகழ்வை உள்ளடக்கி அது பற்றிய விடயங்களை வேட்பாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்துரைப்புடன் வெளியிடும்போது அத்தகைய சம்பவம் பற்றிய ஆர்வமும் கரிசனையுமுள்ள அல்லது அவ்விடயங்களினால் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சாத்தியமுள்ள வேறேதேனுமொரு கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் குறித்த சம்பவம் அல்லது நிகழ்வு தொடர்பில் கட்டணம் அறவிடப்படாமல் கருத்துத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

3.4 தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் சனாதிபதி அல்லது பிரதம அமைச்சர் அல்லது எவரேனும் அமைச்சரொருவருக்கு கருத்துத் தெரிவிப்பதற்கு வழங்கப்படும் ஒரு சந்தர்ப்பம், அத்தகைய ஆள் எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்த அரசியற் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்துதலாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆதலால், அத்தகைய தேர்தலில்/வாக்கெடுப்பில் போட்டியிடுகின்ற ஏதேனும் எதிரணி அரசியற் கட்சியொன்றினால் அதற்காக பெயர்குறிப்பீடு செய்யப்படும் தலைவரொருவரின் விசேட கலந்துரையாடல்களும் அவ்வாறே அச்சு ஊடகங்களினூடாக வெளிப்படுத்தப்படுமிடத்தும், பிரச்சாரக் கூட்டங்களின் அறிக்கைகள் வெளிப்படுத்தப்படுமிடத்தும் அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் ஒத்த சந்தர்ப்பமும் முன்னுரிமையும் அளிக்கப்படுதல் வேண்டும்.

3.5 எவரேனும் வேட்பாளரை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவருக்கு பாதிப்பு ஏற்படுகின்ற விதத்தில் வேட்பாளரொருவருக்கு விசேட மற்றும் வாய்ப்பான விதத்தில் கவனிப்பை வழங்கி செய்தித்தாள்களில் இடமொதுக்கிக் கொடுக்கப்படுதலாகாது.

3.6 தேர்தலொன்றில்/வாக்கெடுப்பொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளரெவரையும் ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரெவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதத்தில் பகிரங்க அலுவலர்களுக்காக நடாத்தப்படும் விரிவுரைகள், நேர்காணல்கள் அல்லது வேறு அநுபந்தங்கள் தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் வெளியிடப்படுதலாகாது.

*3.7* அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்களல்லாத பகிரங்க அலுவலர்களினதும் முனைப்பான பணியிலீடுபட்டிருக்கின்ற பாதுகாப்புப் படைகளினதும் பொலிஸ் அலுவலர்களினதும் இளைப்பாறிய பாதுகாப்புப் படை அலுவலர்களினதும் அல்லது பொலிஸ் அலுவலர்களினதும் சீருடை தரித்தவர்களாக பெற்றுக்கொள்ளும் நிழற்படங்களை அல்லது வெளியீடுகளை, கட்சிகளை அல்லது வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்ற விதத்தில் அச்சு ஊடகங்களில் வெளியிடுதல் அல்லது பிரசித்தப்படுத்தலாகாது.

*3.8* நேர்காணல்களுக்கான பங்குபற்றுநர்களைத் தெரிவுசெய்யும்போது அனைத்து அச்சு ஊடக நிறுவனங்களும் பங்குபற்றுநர்களின் இணைப்பாக்கம் சமநிலையானதாக இருக்கின்றவாறு நியாயமான முறையில் செயல்படுதல் வேண்டும். ஒவ்வோர் அச்சு ஊடக நிறுவனமும், நேர்காணலொன்றில் பங்குபற்றும் எவரேனும் பங்குபற்றுநர் எக்குறிப்பிட்ட மொழியில் தேர்ச்சியற்றவராக உள்ளாரோ அக்குறிப்பிட்ட மொழியில் நேர்காணலை நடாத்துவதன் மூலம் அத்தகைய பங்குபற்றுநருக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் நேர்காணலை நெறிப்படுத்தியதன் பின்னர் அறிக்கைகளை வெளியிடுவதனைத் தவிர்த்தல் வேண்டும். பங்குபற்றுநர்களின் நேர்காணல் குறித்த அறிக்கைகளை பிரசுரிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குறித்த பங்குபற்றுநர் எக்குறிப்பிட்ட மொழியில் தேர்ச்சியுள்ளவராக உள்ளாரோ அக்குறிப்பிட்ட மொழியில் பிரசுரித்தல் வேண்டும். தெளிவற்ற அல்லது புரிந்துகொள்வதற்கு சிரமமான வினாக்களைத் தொடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களைப் பிரசுரித்தலாகாதென்பதுடன் ஒருபோதும் அத்தகைய வினாக்கள் தொடுக்கப்படுதலாகாது. ஒழுக்க முறையற்றனவாகவும் அல்லது மத நல்லிணக்கத்திற்கு அல்லது இன ஐக்கியத்துக்கு குந்தகம் விளைவிக்கின்றனவாகவும் உள்ள கூற்றுக்களை நேர்காணலின்போது பங்குபற்றுநர் அளிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென நேர்காணலின் ஆரம்பத்திலேயே பங்குபற்றுநருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறான கருத்துக்கள் தெரிவிக்கப்படின், அவற்றை வெளியிடாதிருப்பதற்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

*3.9* யாதேனுமோர் அச்சு ஊடக நிறுவனத்தின் எவரேனும் தவிசாளர், முகாமைச் சபை உறுப்பினர், பணிப்பாளர் அல்லது எவரேனும் ஊடகவியலாளர் அரசியற் செயற்பாடுகளில் முனைப்பாக ஈடுபடுவாராயின், அத்துடன் அத்தகைய ஏதேனும் செயற்பாடு, சமச்சீரான செய்திகளை வழங்குவதில் அக்கறை முரணைத் தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கின்றவிடத்து, அத்தகைய ஆள், நிறுவனத்தின் முகாமைக்கு பின்வருவனவற்றை எழுத்தில் அறிவித்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆள், அரசியற் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளமை;

(ஆ) அத்தகைய ஆள், நிறுவனத்தில் வகிக்கின்ற பதவிகள்; அத்துடன்

(இ) செய்திகளையும் செய்தித்தாள் அநுபந்தங்களையும் ஒழுங்குபடுத்துவதில் அல்லது ஒருங்கிணைப்புச் செய்வதில் அத்தகைய ஆள் சம்பந்தப்பட்டுள்ள அளவு.

*3.10* யாதேனுமோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை வகிக்கின்ற எவரேனுமாள் அத்துடன் ஊடக நிறுவனமொன்றின் தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர், பிரதம நிறைவேற்றலுவலர் அல்லது பிரதம பதிப்பாசிரியர் போன்ற அதிகாரங்கொண்ட முக்கிய பதவியை எவரேனுமாள் வகிக்கின்றவிடத்தும், அத்தகைய ஆள் தேர்தலொன்றில்/ வாக்கெடுப்பொன்றில் வேட்பாளரொருவராக உள்ளவிடத்தும் அல்லது அத்தகைய ஆள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக உள்ளாரோ அந்தக் கட்சியின் கீழ் நேரடியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டணியாக அத்தகைய தேர்தலில்/வாக்கெடுப்பில் போட்டியிடுகின்றதாக உள்ளவிடத்தும் அத்தகைய ஆள் ஊடக நிறுவனத்தில் அவருக்கு குறித்தளிக்கப்பட்ட பணிகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருத்தல் வேண்டும். மேலும் அத்தகைய ஆள், தேர்தலில்/ வாக்கெடுப்பில் போட்டியிடுகின்ற கட்சியொன்றின் வேட்பாளரொருவராக அல்லது தேர்தலில்/வாக்கெடுப்பில் போட்டியிடுகின்ற கட்சியொன்றில் முக்கிய பதவி வகிப்பவராகவிருப்பின், ஏதேனும் அச்சு ஊடக நிறுவனமொன்றாகவிருப்பின், சொல்லப்பட்ட ஊடகத்தின் ஊடாக அரசியல் தன்மையினதான ஆக்கங்களை வெளியிடுவதிலிருந்து அவர் தவிர்ந்திருத்தல் வேண்டும்.

*3.11* தேர்தலொன்று/வாக்கெடுப்பொன்று பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் பெறுபேற்றை வெளியிடுகின்ற ஏதேனும் அச்சு ஊடகம், அத்தகைய அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்திய ஒழுங்கமைப்பின் பெயரையும் அத்தகைய பணியை ஒப்படைத்த நிறுவனங்களையும், அதற்கு நிதியளித்த நிறுவனம் அல்லது ஆளின் பெயரையும், ஆய்வின்/ அபிப்பிராய வாக்கெடுப்பின் தேவைப்பாட்டையும் அதற்காக ஈடுபடுத்தப்பட்ட முறைமையியலையும் மாதிரியின் அளவையும் பிழைகளின் விளிம்பையும் வெளிக்கள வேலை காலப்பகுதியையும் வெளியிடுதல் வேண்டும். மேலும், அத்தகைய அபிப்பிராய வாக்கெடுப்பு, அத்தகைய வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில் காணப்பட்ட பொது மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றதென்பதையும் அறிக்கையிடுதல் வேண்டும்.

3.12 எவரேனும் வேட்பாளர், எக்கட்சியை அல்லது குழுவைச் சேர்ந்தவராக இராதுள்ளாரோ, அக்கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளரொருவரின் வேட்பாண்மையை மேம்படுத்துவதற்கான ஏதேனும் கூற்றை அத்தகைய வேட்பாளர் அளிக்குமிடத்து, அத்தகைய கூற்றை வெளியிடுதல் என்ற வகையாக அத்தகைய கூற்றுக்குப் பிரசித்தமெதுவும் கொடுக்கப்படுதலாகாது.

3.13 ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தின் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையத்தின் உட்புறத்தில் நிழற்படங்களை எடுத்து தேர்தல் ஆணைக்குழுவின் உரிய எழுத்திலான சம்மதமின்றியவிடத்து வெளியிடுதல் ஆகாது. அனுமதியின்றிப் பெறப்பட்ட ஏதேனும் நிழற்படத்தை செய்தித்தாள்களில் பிரசுரித்தல் அல்லது வேறு அச்சு ஊடகங்களில் பிரசித்தப்படுத்தல் ஆகாது. தேர்தல் ஆணைக்குழுவின் சம்மதத்துடன் பெறப்பட்ட அல்லது வேறு பெறப்பட்ட நிழற்படங்களாயினும் தேர்தல்/ வாக்கெடுப்பு நடைபெற்றதன் பின்னரே அவை வெளியிடப்படுதல் வேண்டும்.

3.14 தேர்தல்/வாக்கெடுப்புத் திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட, எவரேனும் வேட்பாளரினால் நடாத்தப்பட்ட அல்லது அவரை உட்படுத்துகின்றதாக ஏதேனும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளரொருவரை மேம்படுத்துகின்ற அல்லது அதன் நிலையைக் குறைக்கின்ற ஏதேனும் வர்த்தக விளம்பரம், கலந்துரையாடல், அபிவிருத்திச் செயற்பாடு அல்லது அத்தகைய எவையேனும் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் கலந்துரையாடல்கள், செய்தி அறிக்கைகள், அத்தகைய தன்மையினதான வேறேதேனும் செய்தி, தேர்தல்/வாக்கெடுப்புத் திகதிக்கு நேர் முன்னர் நிலவுகின்ற அமைதி காலப்பகுதியினுள் வெளியிடப்படுதலாகாது. அரசியற் கட்சிகளினாலும் வேட்பாளர்களினாலும் வெளியிடப்பட்ட கொள்கைகள், வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் நன்மை தீமைகள் குறித்து கவனம் செலுத்தி சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் பரிசீலிப்பதற்கும் வாக்காளரை இயலச் செய்யும் விதத்தில் அமைதியானதொரு சூழல் வாக்கெடுப்புக்கு முன்னர் காணப்படுவது முக்கியமானதாகக் கருதப்படுவதனாலாகும்.

3.15 தேர்தல்/ வாக்கெடுப்புப் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் 'அமைதி காலம்' எனப்படுவது தேர்தலை/ வாக்கெடுப்பை நடாத்துவதற்கு விதித்துரைக்கப்பட்ட தினத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் ஆரம்பித்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுதல் வரையான காலமாகும். ஓர் அரசியற் கட்சி/சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் ஊக்கப்படுத்தப்படுவதற்கு அல்லது பங்கத்திற்கு உள்ளாவதற்கு காரணமாக அமைகின்ற விதத்தில் பிரச்சார விளம்பரம் எதுவும் இக்காலப்பகுதியினுள் வெளியிடப்படுதலாகாது. இருப்பினும், அமைதி காலம் ஆரம்பிப்பதற்கு முந்திய தினத்தில் அரசியற் கட்சிகளை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கு நடாத்தப்படுகின்ற பொதுக் கூட்டங்களின் அறிக்கைகள், குறித்த பொதுக் கூட்டங்கள் நடைபெற்ற தினத்திற்கு மறுதினம் வெளியாகும் செய்தித்தாள்களிலும் இறுதித் தினக் கூட்டங்களின் அறிக்கைகள் எந்தவொரு கட்சிக்கும் அல்லது வேட்பாளருக்கும் விசேட கவனம் கிடைக்காதவாறும் வெளியிடப்படலாம்.

3.16 மத நம்பிக்கைகள், மத வழிபாடுகள், பேச்சு வழக்குகள், இனத்துவம், வழக்காறுகள் மற்றும் சாதிகள், குலங்கள் என்பன உட்பட, பல்வேறு ஏதுக்களின் மீது இலங்கை மக்களிடையே குரோதத்தையும் சகிப்புத்தன்மையின்மையையும் உருவாக்கக்கூடிய அல்லது தூண்டக்கூடிய விதத்தில் செய்தித்தாள் அறிக்கைகளை அல்லது தகவல்களை வெளியிடுவதை அச்சு ஊடக நிறுவனம் ஒவ்வொன்றும் தவிர்த்தல் வேண்டும்.

3.17 சமூகத்தினிடையே அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களிடையே குரோதத்தை உண்டுபண்ணுகின்ற அரசியலை மேம்படுத்துகின்றவாறான செயற்பாடுகளை ஒவ்வோர் அச்சு ஊடக நிறுவனமும் தவிர்த்தல் வேண்டும்.

3.18 ஏதேனும் அச்சு ஊடக நிறுவனம், ஆளடையாளத்தை உறுதிசெய்துகொள்ளாத ஆட்கள் அல்லது ஒழுங்கமைப்புகளின் விளம்பரங்களுக்கு அல்லது பிரச்சாரங்களுக்கு உள்ளடக்கத்தை வழங்காதிருக்க வேண்டும். அவ்வாறு வெளியிடுவதன் மூலம் ஏற்படக்கூடிய பொறுப்பு, குறித்த அச்சு ஊடக நிறுவனத்தைச் சாரும்.

3.19 ஒவ்வோர் அச்சு ஊடக நிறுவனமும், வேறோர் அரசியற் கட்சியின் வேறொரு வேட்பாளர் குறித்து எவரேனும் வேட்பாளரினால் அல்லது ஆதரவாளரினால் முன்னர் அளிக்கப்பட்ட கூற்றை, அத்தகைய கூற்றை அளித்த வெளிப்படுத்துநரின் சம்மதமின்றி மீண்டும் வெளியிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுடன், தன்னால் முன்னர் அளிக்கப்பட்ட கூற்றை மீண்டும் வெளியிடுவதைத் தவிர்ந்துகொள்ளுமாறு குறித்த வெளிப்படுத்துநரினால் செய்யப்படும் கோரிக்கை குறித்து பரிசீலித்தலும் வேண்டும்.

3.20 விடயத்துக்கேற்ப, ஏதேனும் கூற்றை அல்லது செய்தியை வெளியிடுகின்ற ஏதேனும் அச்சு ஊடக நிறுவனமொன்றுக்கும் அத்தகைய செய்தியை அல்லது கூற்றை வெளியிடுகின்ற ஆளெவருக்கும் பிழையான கூற்றுக்களை அல்லது செய்திகளை வெளியிடுதல் தொடர்பாக சமமான முறையில் வகைசொல்ல வேண்டியதாகவும் வகைசொல்ல வேண்டியவராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், இது தொடர்பாக எழக்கூடிய சட்ட வழக்கு நடவடிக்கைக்கு அமைந்ததாகவும், அமைந்தவராதலும் வேண்டும்.

*3.21* தேர்தல்/வாக்கெடுப்பின் முடிவு எதுவும் தேர்தல் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வரை தேர்தலின்/வாக்கெடுப்பின் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளை பகிரங்கப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

*3.22* அனைத்து அரச, பகுதியளவிலான அரச மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களும், ஏதேனும் அரசியற் கட்சியை, குழுவை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கு அரச ஆதனத்தையும் நிதிகளையும் ஈடுபடுத்துவதன் மூலம் அல்லது அரசிறைக்கு நட்டம் விளைவிப்பதனை அல்லது ஏதேனும் நிறுவனத்துக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் செயலாற்றுவதனைத் தவிர்த்தல் வேண்டும். தனியார் அச்சு ஊடக நிறுவனங்களும் அவ்வாறு செயற்படுதல் வேண்டும். ஊடக வழிகாட்டிநெறிகள் மீறப்படுதல் தொடர்பில் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுடன் சேர்த்து மேலதிகமாக, பொறுப்பாகவுள்ளோர் தொடர்பில் உரிய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம்.

*3.23* அனைத்து அச்சு ஊடகங்களின் உரிமையாளர்களும் இவ்வூடக வழிகாட்டிநெறிகளைக் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டுமென்பதுடன், அந்தந்த நிறுவனத் தலைவர்கள் அத்தகைய வழிகாட்டிநெறிகளுக்கமைய தமது பணியாட்குழு இயங்குவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

*3.24* ஏதேனும் தேர்தல்/ வாக்கெடுப்பு காலப்பகுதியினுள், இவ்வூடக வழிகாட்டிநெறிகளுக்கு அமைந்தொழுகுதல், ஒவ்வோர் அச்சு ஊடக நிறுவனத்தினதும் பொறுப்பாதல் வேண்டும்.

*3.25* சுதந்திரமானதும் நீதியானதுமானதொரு தேர்தலை/ வாக்கெடுப்பை நடாத்துவதற்கு இவ்வழிகாட்டிநெறிகளைக் கடைப்பிடித்தொழுகுதல் இன்றியமையாததாக இருக்கின்றமையால், இவ்வழிகாட்டிநெறிகளைக் கடைப்பிடித்தொழுகுதல், அச்சு ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களினதும் அதனைப் பயன்படுத்துபவர்களினதும் கடமை மட்டுமன்றி, அவர்களின் பொறுப்புமாதல் வேண்டும்.

*3.26* தேர்தல்/வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் அரசியல்வாதிகளினால் அல்லது வேறு ஆட்களினால் வன்செயல்களையும் தேர்தல் சட்ட மீறல்களையும் சட்டவிரோத செயல்களையும் மதித்து அல்லது சமூகக் குழுக்களுக்கிடையில் கொந்தளிப்புகளும் வன்செயல்களும் ஏற்படக்கூடிய விதத்திலான செய்திகளை, கூற்றுக்களை, உரைகளை அல்லது கலந்துரையாடல்களை வெளியிடுவதைத் தவிர்ந்துகொள்வதற்கு அனைத்து அச்சு ஊடக நிறுவனங்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

*3.27* இவ்வூடக வழிகாட்டிநெறிகளுக்கு உள்ளடக்கப்படுகின்றவாறான அல்லது உள்ளடக்கப்படாதவாறான விடயங்கள் தொடர்பாக அச்சு ஊடகம் எதனிலும் மேற்கொள்ளப்படுகின்ற வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்களின் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அல்லது செயல்வலுவிலுள்ள தேர்தல் சட்டங்கள் அல்லது வேறேதும் சட்டம் மீறப்படுமாயின் அவ்வாறான வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்களைச் செய்வதை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.

*3.28* ஊடக வழிகாட்டிநெறிகளைக் கடைப்பிடித்தலும் அவற்றுக்கு அமைந்தொழுகுதலும் அனைத்து அச்சு ஊடக நிறுவனங்களினதும் பொறுப்பாதல் வேண்டும்.

EOG *08 -0340*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.